தமிழ்நாடு ஆளுநர்

ஆர்.என்.ரவி வெளியேறியே ஆக வேண்டும்!

புதுடெல்லி சமூக ஆர்வலர் யோகேந்திர யாதவ் பதிவு!

புதுடெல்லி, ஜன. 9 -

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி வெளியேறியே ஆக வேண்டும் என்று புதுடெல்லி சமூக ஆர்வலர் யோகேந்திர யாதவ் குறிப்பிட்டுள்ளார்.

புதுடெல்லியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் யோகேந்திர யாதவ் தனது, சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

'திருவாளர் ஆர்.என்.ரவி வெளியேறியே ஆக வேண்டும். பொது வாழ்விலிருந்து ஓய்வு பெற ஏன் தமிழ்நாடு ஆளுநர் தகுதி பெற்றவராக இருக்கிறார் என்பதற்கு இன்றைய 'தி இந்து' வின் வலுவான தலையங்கம் போதுமானது'

இவ்வாறு யோகேந்திர யாதவ் குறிப்பிட்டுள்ளார்.

சவுதி அரேபியாவில் பணிபுரிந்த நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பெனடிக்ட் ரவி உயிரிழப்பு!

கலாநிதி வீராசாமி எம்.பி. முயற்சியில் - உடல் தாயகம் கொண்டு வரப்பட்டு குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது!

சென்னை, ஜன.9-

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பெனடிக்ட் ரவி, சவுதி அரேபியா நாட்டில் பணிபுரிந்து வந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் 17-ஆம் தேதி உயிரிழந்தார்.

அவரது உடலை சொந்த ஊருக்குக் கொண்டு வந்து இறுதிச் சடங்கு நடத்த வேண்டும் என்று அவர்களது குடும்பத்தார் கேட்டுக் கொண்ட நிலையில் கழக அயலக அணியின் தலைவரும், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் சுப்பிரமணியனுக்கு கடிதம் வாயிலாக கோரிக்கை வைத்தார்.

அதனைத் தொடர்ந்து டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.யின் தொடர் முயற்சி மற்றும் சவுதி அரேபிய நாட்டின் கழக நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன் நேற்று பெனடிக்ட் ரவியின் உடல் தாயகம் கொண்டுவரப்பட்டு குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

தி.மு.க.வின் ஒருவிதமான

'அரசியல் வரப்பிரசாதம்' ஆர்.என்.ரவி!

இந்து என்.ராம் கருத்து!

சென்னை, ஜன. 9 -

தி.மு.க.வின் 'ஒருவிதமான அரசியல் வரப்பிரசாதமாக' விளங்குகிறார் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி என்று இந்து என்.ராம் நையாண்டியாகப் பதிவிட்டுள்ளார்.

இந்து என்.ராம் தனது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி, தனது சச்சரவான "குழந்தைத் தனத்தின்" மூலம், தி.மு.க.வுக்கு ஏன் ஒருவித 'அரசியல் வரப்பிரசாதமாக' விளங்குகிறார் என்பதை மீண்டும் ஒருமுறை தெளிவாக நிரூபித்துள்ளார்! தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இதை நிதானமாகவும் கருத்துப்பூர்வமாகவும் விளக்குகிறார்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

தமிழ்மொழியையும் தமிழ்நாட்டு மக்களையும் தொடர்ந்து இழிவுபடுத்தும்

ஆளுநரை ஒன்றிய அரசு உடனடியாக திரும்பப் பெற்றிட வேண்டும்!

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன் குமார் கண்டன அறிக்கை!

சென்னை, ஜன.9-

ஆளுநரை ஒன்றிய அரசு உடனடியாக திரும்பப் பெற்றிட வேண்டும் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன் குமார் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ் மொழியையும், தமிழ்நாட்டு மக்களையும் தொடர்ந்து இழிவுபடுத்துவதையே தனது நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் செயல்பட்டு வருவது வன்மையானக் கண்டனத்துக்குரியதாகும். தமிழ்நாடு சட்டப்பேரவையின் மரபுகளை காப்பதற்கான மனம் இல்லையெனில், ஆளுநர் இந்த பதவியில் இருந்து விலகிட வேண்டும் அல்லது ஒன்றிய மோடி அரசு அவரை விலக்கிட வேண்டும்.

ஒவ்வொரு முறையும் சட்டமன்றம் கூடும் பொழுது ஆளுநர் சண்டித்தனம் செய்வதும், விமர்சனம் செய்வதுமாக இருப்பது ஜனநாயகத்தை கேலிக்கூத்தானதாகும். தமிழ்த் தாய் வாழ்த்து பாடியதை பொறுத்துக் கொள்ள முடியாத ஒருவர் தமிழ்நாட்டில் எப்படி பதவியில் நீடிக்க முடியும்?

ஆண்டாண்டு காலமாக பேரவையின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும் இறுதியில் நாட்டுப் பண் பாடுவதும் மரபாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஆளுநர் ரவி அவர்கள் தமிழ்நாட்டினுடைய ஆளுநராக பொறுப்பேற்றதிலிருந்து தொடர்ந்து இந்த மரபுகளை மாற்ற முயற்சிக்கிறார்.

இது அவர் பதவியேற்று கொண்டிருக்கிற அரசியல் சட்டத்திற்கு முரணான தாகும். ஒன்றிய பா.ஜ.க மோடி அரசும் இதனை வேடிக்கை பார்ப்பது ஆளுநரின் செயலை ஊக்கப்படுத்துவதாக அமைகிறது.

தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலம் ஆக்கிட தொடர்ந்து அரசும், முதல்வரும் செயல்பட்டு வருவதை நாடு அறியும். திராவிட மாடல் அரசு நடைமுறைப்படுத்தக்கூடிய பல்வேறு திட்டங்களை இந்தியாவின் பிற மாநிலங்கள் மட்டுமல்ல கடல் கடந்து பல நாடுகளும் கடைபிடிக்கக் கூடிய நிலையை சிலரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

எனவே குறுக்கு வழியில் இந்த அரசுக்கு அவப் பெயர் ஏற்படுத்தி, அரசியல் ஆதாயம் தேட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு கருவியாக ஆளுநர் பயன்படுத்தப்பட்டு வருகிறார் என்பது மக்களின் ஆழமான கருத்தாகும். என்ன தான் சண்டித்தனம் செய்தாலும், சாட்டையால் அடித்தாலும், சங்கு ஊதினாலும், தமிழ் மண்ணில் ஒருபோதும் தாமரை மலராது.

இவ்வாறு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டை தொடர்ந்து அவமதிக்கும் ஆளுநரைக் கண்டித்து

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில்!

நெல்லை, ஜன.9-

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் ஏஜண்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல்களைச் செய்யும் ஆளுநரை காப்பாற்றிடவும், ஒன்றிய அரசின் மீது உள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசை மாற்றவும், வித்தைகளைச் செய்யும் அ.தி.மு.க. பா.ஜ.க.கள்ளக் கூட்டணியை கண்டித்தும் நெல்லை கிழக்கு மாவட்டம் மற்றும் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில்

வண்ணார்பேட்டை மேம்பாலத்தின் கீழ் உள்ள செல்லப்பாண்டியன் சிலை அருகில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், சா.ஞானதிரவியம், ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், சித்திக், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாநில மீனவரணி துணைச் செயலாளர் எரிக்ஜூடு, மாநில சட்டத் துறை துணை செயலாளர் ராஜா முகம்மது, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ராஜவர்மன், மாவட்ட அவைத்தலைவர்கள் கிரகாம்பெல், முருகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தர்மன், கிரிஜா குமார், மைக்கேல், நம்பி, தமயந்தி, அயலக அமீரகப் பொறுப்பாளர் துபாய் மீரான், மேயர் ராமகிருஷ்ணன், முன்னாள் மேயர் சரவணன், துணை மேயர் ராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவஐயப்பன், நடராஜன், சாந்தி சுபாஷ், ராமச்சந்திரன், கடையநல்லூர் தொகுதி பார்வையாளர் நவ்ஷாத், ஒன்றிய செயலாளர்கள் கே.எஸ். தங்கபாண்டியன், போர்வெல் கணேசன், வேலங்குளம் கண்ணன், ராஜன், செல்வகருணாநிதி, சுடலைக் கண்ணு, ஜெகதீஸ், பரணி சேகர், முத்துப்பாண்டி, அன்பழகன், மாரியப்பன், அருள்மணி, முத்துக்கிருஷ்ணன், நகர செயலாளர்கள் பிரபாகரன், கணேசன், மணி சூரியன், மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, முன்னாள் பொருளாளர் அருண்குமார், மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், சுதா மூர்த்தி, பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை, மண்டல தலைவர்கள் பிரான்சிஸ், மகேஸ்வரி, ரேவதி, பேரூர் செயலாளர்கள் பேச்சி குட்டி, செல்வபாபு, அணி அமைப்பாளர்கள் கருப்பசாமி கோட்டையப்பன், வில்சன் மணித்துரை, காமினி தேவன், செல்வ சூடாமணி, ஜான்ரபீந்தர், அனிதா, சௌந்தரம் முத்துராஜ், பொன்னையா பாண்டியன், தொப்பி மைதீன், மாடசாமி, அருள் இளங்கோ, பல்க் குமார், சேவியர், ராஜகுமாரி, அருண், இம்மானுவேல் சின்னத்துரை, நவநீதன், வேல்முருகன் துணை அமைப்பாளர்கள் செல்வம், அலிஃப் மீரான், கந்தசாமி, ஹரி பாலகிருஷ்ணன், செய்யது அஜீஸ், மனோஜ் குமார், சேக் உஸ்மானி, ஜலீஸ் ரகுமான், மாலதி, கண்ணன், பேச்சிமுத்து, வீரபாண்டியன், ரகுமான்ஷா, செல்வ ஆனந்த், தகவல் தொழில் நுட்ப அணி காசிமணி, காதர் ஒலி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சத்தியவாணி முத்து, மகளிர் அணி ரேவதி அசோக், சைபுநிஷா, ஹமிதா, சார்லி, தேவிகா, அருணாசலதேவி, பூங்கனி, சிறுபான்மை நலப் பிரிவு முகமது அலி, விவசாய அணி போதிக்கண்ணு, மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன், டாக்டர் சங்கர், கோகுலவாணி, பேச்சியம்மாள், ராஜேஸ்வரி, சகாய ஜூலியட் மேரி, சுப்புலட்சுமி, இந்திரா, அல்லா பிச்சை, சின்னத்தாய், நித்திய பாலையா, சுந்தர், ரம்ஜான் அலி, சுப்பிரமணியன், வசந்தா, மாரியம்மாள், மன்சூர், வட்டச் செயலாளர்கள் ஆவின் கல்யாணி, மாரிமுத்து, இசக்கி, பத்மராஜ், மணிகண்டன், லெனின், தொப்பி காஜா, பேபி கோபால்,

ஆறுமுகபாண்டியன், வேல்முருகன், அலிஷேக் மன்சூர், முத்துராமன், சடாமுனி, முத்துராமன், செந்தில் முருகன், மேகை செல்வம், சிந்து முருகன், கதிரேசன், ராஜ், பிரேம் கணேசன், சுந்தர்ராஜன், செய்யது மைதீன், பாப்புக்குமார், பட்சிராஜன், பால மகேஷ், ஜெயின் உசேன், ஆறுமுகம்,

மாவட்ட பிரதிநிதி கார்டன் சேகர், வேல் பாண்டியன், காஜா, பிரான்சிஸ் மற்றும் பேரூர் கழக, வட்டக் கழக, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக தொண்டர்கள், கழக முன்னோடிகள் உள்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் அவமதிக்கும் ஆளுநரைக் கண்டித்து

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

வே.ஜெயபாலன் தலைமையில் - ராணி ஸ்ரீகுமார் - பூங்கோதை ஆலடி அருணா - கலை கதிரவன் பங்கேற்பு!

தென்காசி, ஜன.9-

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரை கண்டித்தும், ஆளுநரை காப்பாற்றும் அ.தி.மு.க.பா.ஜ.க.கள்ளக் கூட்டணியையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் ரயில் நிலையம் அருகில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் தென்காசி மக்களவை உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீ குமார், மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் கலை கதிரவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தென்காசி நகர செயலாளர் சாதிர் வரவேற்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வில மாவட்ட துணைச் செயலாளர்கள் கென்னடி, கனிமொழி, தமிழ்ச்செல்வன், பொருளாளர் ஷெரிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.செல்லத்துரை, சேசுராஜன், சேக்தாவூது, முத்துப்பாண்டி,

ஆறுமுகச்சாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் முகமது ரஹீம், சமுத்திரபாண்டியன், கதிர்வேல், அருள், இராஜேஷ்வரன், தமிழ்ச் செல்வி, ஒன்றிய செயலாளர்கள் செல்லத்துரை, சிவன் பாண்டியன், திவான்ஒலி, சீனித்துரை அன்பழகன், ரவி சங்கர், அழகு சுந்தரம் மகேஷ் மாயவன், மாரிவண்ண முத்து, ஜெயக்குமார், நகர செயலாளர்கள் வெங்கடேசன், கணேசன், பேரூர் கழக செயலாளர் சுடலை, குட்டி, முத்தையா, பண்டாரம், ஜெகதீசன், முத்து, ராஜராஜன், வெள்ளத்துரை, உசேன், சிதம்பரம், கோபால், அழகேசன், லட்சுமணன்,

ஒன்றியக் குழு தலைவர்கள் ஷேக் அப்துல்லா (தென்காசி) திவ்யா மணிகண்டன் (ஆலங்குளம்) கடையநல்லூர் நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான், அணி அமைப்பாளர்கள் முருகன், தங்கராஜ் பாண்டியன், அண்ணாமலை, பேச்சிமுத்து, கோமதி நாயகம், இசக்கிபாண்டியன், வீராணம் சேக் முகமது, ரமேஷ், முத்துக்குமார், சங்கீதா, அழகு தமிழ் சங்கர், நகர நிர்வாகிகள் ராமதுரை, பால் ராஜ், சேக்பரீத், வேல் ஐயப்பன், சாரதி முருகன், கஜேந்திரன், வடகரை ராமர், சபரி சங்கர், சன் ராஜா, சங்கர் ராஜன், இசக்கி ரவி, மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், துணை அமைப்பாளர்கள், பேரூர் கழக கிளைக் கழக, வட்டக் கழக, நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சீத்தா வேதநாயகம்
சனவரி 9 (2019)

கழகக் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்டு, பள்ளிப் பருவத்திலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

புதுச்சேரி மாநிலத்தில், பகுதிச் செயலாளர், துணைத் தலைவர், மாநிலக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில அவைத்தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுச்சேரி நகர்மன்ற உறுப்பினராக மூன்று முறையும் – சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

புதுச்சேரியில் பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் – துணைத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

புதுவை - நமது முரசு நாளிதழின்

செய்தியாளர் செல்வன் மறைவு!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

சென்னை, ஜன.9-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விடுத்த இரங்கல் செய்தி வருமாறு:

புதுச்சேரியை தலைமையிடமாக கொண்டு வெளியாகும் நமது முரசு நாளிதழில் தலைமை செய்தியாளராக பணிபுரிந்து வந்த செல்வன் (வயது 61) அவர்கள் 06.01.2025 அன்று உடல் நலக்குறைவால் மறைவெய்தினார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த மன வருத்தம் அடைந்தேன்.

அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும், ஊடகம் மற்றும் பத்திரிகை துறையைச் சார்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
அரங்கத்துறை

அ.து.ந.க.எண்.அ3 / 1630 / 2024

மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு

கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

Rejuvenation of Playground at Burma Nagar in Div - 16, Unit - 4, Zone - 2

பணியின் உத்தேச தொகை ரூ.83.68 இலட்சம் (including 18% GST)
முன்வைப்பு தொகை :- பணியின் மதிப்பில் 1% : ரூ.84,000/-

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **23.01.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **24.01.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 78 / ஒப்பந்தப்புள்ளி / 2025

கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி)

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம்.ஏ. காதர்
சனவரி 9 (2011)

இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றி வந்த இவர், 1967ஆம் ஆண்டு மண்டபம் நகரக் கழகச் செயலாளராகவும் – 1983ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டக் கழகப் பொருளாளராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்தவர்.

பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக நான்கு முறையும் – பொதுக்குழு உறுப்பினராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்து, இறுதியில் சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

1967ஆம் ஆண்டு மண்டபம் ஊராட்சிமன்றக்குழுத் தலைவராகவும் – 1996ஆம் ஆண்டு இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவராகவும் – 1998ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.